இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 11 | திகதி : 25.08.2024 | விலை : 50.00

## மரியாவின் பிரமாணிக்கம், பொறுமை, பிறர்நல செயற்பாடுகள் எம் குடும்பங்களில் மலரட்டும் – கேவலார் திருவிழாவில் யாழ் ஆயர்



ஜேர்மன் கேவலார் மரியனையின் திருத்தலத் திருவிழா இம்முறை 37வது வருடமாக வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது. இத்திருவிழாத் திருப்பலியை தலைமையேற்று ஒப்புக்கொடுத்த யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானபிரகாசம் ஆண்டகை அவர்கள் தமது மறையுரையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தமது மறையுரையில் மேலும் விவரிக்கையில: இன்று சுயநலம், தன்மையப்பட்ட வாழ்வு மலிந்து செல்வதனால் குடும்பங்களுக்கிடையே ஒற்றுமையின்மையும், விவாகரத்துக்களும் அதிகரித்து செல்கின்றன. மரியன்னையின் நற்பண்புகளை எமது குடும்ப வாழ்வில் மேல் வரிச்சட்டங்களாக கொண்டு நாம் வாழ வேண்டும் என குறிப்பிட்டார். ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக ஆன்மீக குரு அருட்பணி T. நிருபன் அடிகளாரின் ஒழுங்குபடுத்துதலில் இவ்விழா நன்கே நடந்தேறியது. யாழ் ஆயரின் குருத்துவ பொன் விழாவை முதன்மைப்படுத்தி 50 அன்னையர்கள் ஆராத்தி எடுத்து ஆயரை வரவேற்றனர். உலகின் எல்லா பாகங்களிலிருந்தும் பன்னீராயிரம் பக்தர்கள் இவ்விழாவில் கலந்து அன்னையின் ஆசீரைப்பெற்றுக் கொண்டனர்.

## யாழ் . மாவட்ட சர்வமதப் பேரவை



யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையின் விசேட கூட்டம் கடந்த 10 ஆம் திகதி கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. பேரவைத் தலைவர் கிருபானந்த குருக் கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட் டத்தில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகள், போதைப்பொருள் பாவனை யின் தீமைகள் ஆகிய தலைப்புகளில் உரை களும் கலந்துரையாடலும் நடைபெற்றன. இக்கலந்துரையாடலில் சிதைந்து வரும் பூமியையும், அழிந்துவரும் இளம் சமுதாயத் தையும் காப்பாற்றும் நோக்கிலானா செயற் திட்டங்கள் ...

ப.2

## மட்டு. மறைமாவட்டத்திற்கு அப்போஸ்தலிக்க பரிபாலகராக ஆயர் அன்ரன் ரஞ்சித் நியமனம்



கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராகக் கடந்த நான்கு வருடங்களாகப் பணியாற்றிய பேரருட்கலாநிதி அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கடந்த 19.08.2024 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களினால் மட்டக்களப்பு மறை மாவட்டத்திற்கு அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமிக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு.ஜோசப் பொன்னையா ஆண்டகையின் ஓய்வு நிலைக்கான விண்ணப்பத்தினை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை மேற்கண்ட நியமனத்தை வழங்கியுள்ளார்.

அன்ரன் ரஞ்சித் ஆண்டகை 2000 ஆம் ஆண்டு புரட்டாதி 15ம் திகதி குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டு 24 வருட குருத்துவ வாழ்வின் பெரும்பகுதியை கல்வித் துறையில் செலவிட்டார். கொழும்பு சென். பீற்றர் கல்லூரி, சென். ஜோசப் கல்லூரி என்பவற்றில் தனது கல்விப் பணியைத் தொடர்ந்த பின் மொறட்டுவ புனித செபஸ்ரியார் கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்டு 2020 ஆடி 13இல் கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு துணை ஆயராகத் திருத்தந்தை பிரான்சிஸ் ஆண்டகை அவர்களால் நியமிக்கப்பட்டு ஆவணி 29ம் திகதி அருட்பொழிவு செய்யப்பட்டார்.

தற்போது மட்டக்களப்பு மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமிக்கப்பட்டுள்ள ரஞ்சித் ஆண்டகை அவர்களது பணி சிறக்க பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பில் நாம் உள்ளன்போடு வாழ்த்து கின்றோம்.

## யாழ் கலைஞர்களுக்கு 'தர்மபிரபாஸ்வர' விருது



தேசிய கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் ஆசீருடன் தேசிய கத்தோலிக்க வெகுசன ஊடக மத்திய நிலையமும் தேசிய கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடாத்திய **'தர்மபிரபாஸ்வர'** விருது வழங்கும் நிகழ்வு கடந்த 20ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாப-கார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 41 கலைஞர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். இக்கலைஞர்கள் தேசிய ரீதியாகவும் மறை மாவட்டங்கள் ரீதியாகவும் பல்வேறு துறை களில் பணியாற்றுபவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். மறைமாவட்டங்கள் ரீதியாக மறைமாவட்ட சமூகத்...

ப.2

## யாழ். குருமுதல்வர் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர சந்திப்பு



சர்வஜன அதிகாரக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரான தாயக மக்கள் கட்சி உறுப்பினர் திலித் ஜயவீர அவர்கள் யாழ்.மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பு 17ஆம் யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் பிவிதுறு ஹெல உறுமய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் உதய ஹம்பன்பில, தேசிய சுதந்திர முன்னணித் த லை வ ரு ம் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச மற்றும் கூட்டணி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். எமது நாட்டில் வாழும் மக்கள் தனித்தனி இனமாக ஒன்றுபடு வதைவிட எல்லா மத இன மொழி பேசும் மக்களும் ஒன்றுபட்டு வாழும்போதுதான் மகிழ்ச்சியான ஒரு நாட்டை க ட் டி யெ ழு ப் ப முடியுமென்பதனையும் ஒன்றாய் எழுந்திடும் தேசம் மகிழ்ச்சி மிகு தேசம் என்பதையும் கொள்கையாக கொண்டு இக்கட்சி உரு வாக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## யாழ். மரியன்னை பேராலய வருடாந்த திருவிழா



கடந்த 15ஆம் திகதி வியாழக்கிழமை யாழ் மரியன்னை பேராலய வருடாந்த திருவிழாத் திருப்பலி யாழ் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. மாலை திருச்சொரூப பவனி யுடன் அன்னையின் ஆசீர் பங்குத் தந்தை அருட்பணி ஜெறோ செல்வ நாயகம் அடிகளாரினால் வழங்கி வைக் கப்பட்டது.

## கரவை தேவமாதாவிற்கு முடிசூட்டல்



மடு அன்னைக்கு முடிசூட்டப்பட்பதன் நூறுவருடங்கள் நிறைவை முன்னிட்டு அதன் நினைவாக கரவை தேவ மாதா ஆலயத்தில் அன்னைக்கு 06.08.2024 மாலை கொடியேற்ற நாளன்று பங்குத்தந்தை அருட்பணி விஜின்ரஸ் தலை மையில் குரு முதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரால் தங்கத்தினால் ஆன முடி சூட்டப்பட்டது.

குருமுதல்வர் திருப்பலியை ஒப்புக்கொடுத்து தன் மறை உரையில் அன்னைக்கு வானதூதர்கள் புடை சூழ தந்தை மகன் தூய ஆவியானவரால் முடிசூட்டப்பட்ட நிகழ்வின் வரலாற்றை விபரித்தார்.

ப.2

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## விடிவு கிடைக்குமா...?

உலக நாடுகளில் பல்வேறு வகையான அரசாங்க முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவற்றை ஜனாதிபதி அரசாங்க முறை, மந்திரி சபை (பாராளுமன்ற) அரசாங்க முறை, கலப்பு அரசாங்க முறை, அனைத்தாண்மை அரசாங்க முறை எனப் பல வகைகளில் அடுக்கிச் செல்லலாம்.

இலங்கை சுதந்திரமடைந்த வேளை மந்திரி சபை அரசாங்க முறையை தன்னகத்தே கொண்டு 1978 ஆம் ஆண்டு வரை அவ்வரசாங்க முறையே நீடித்து வந்தது. இந்நிலையில் இலங்கைக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அரசாங்க முறையே உகந்தது என்ற கருத்தை இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன தனது மனங்களில் கொண்டிருந்ததுடன் இது பற்றிய கருத்தினையும் பொதுத் தேர்தல் மேடைகளில் முழக்கமிட்டு வந்தார்.

இலங்கையைத் துரிதமாக அபிவிருத்தி செய்யவும், பொருளாதார நிலையில் வளர்ச்சியடையச் செய்யவும், இனப் பிரச்சினைக்கான தீர்வினை எட்டவும், வினைத்திறன் மிக்க அரசாங்கம் ஒன்றை அமைக்கவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை இலங்கைக்கு உகந்தது என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்து பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று பிரதமராகப் பதவி ஏற்று, பின்னர் இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பின் மூலம் இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக முடிசூடினார். அதனைத் தொடர்ந்து இலங்கை இன்றுவரை நிறைவேற்று அதிகா ரம் கொண்ட ஜனாதிபதிகளை அரச தலைமைகளாகக் கொண்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை இலங்கையின் அபிவிருத்தி நோக்கிய பயணத்தில் பல திருப்பு முனைகளை ஏற்படுத்தி வந்தாலும் இனப்பிரச்சினை தொடர்பாக எந்தவொரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் உறுதியான, தீர்க்கமான முடிவுகளை எடுத்து, தமிழரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை செலுத்தாது தமது தார்மீகக் கடமையிலிருந்து தவறி விட்டனர் என்றே கூறவேண்டும்.

முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி காலத்திலே தான் சிறுபான்மைத் தமிழருக்கெதிராக பல்வேறு அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. யாழ்ப்பாண நூலகம் எரியூட்டப்பட்டமை, 1983 யூலை இனக்கலவரம் போன்றவற்றை யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது. தொடர்ந்தும் தமிழர்கள் அடக்குமுறைக்கு உள்ளாகி 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் வரை தமிழர்கள் அடக்கி அழித்தொழிக்கப்பட்ட வேளை தமிழர்களைக் காக்கும் தலைமைத்துவத்தினை வழங்க இலங்கையின் அரச தலைவர்கள் தவறி விட்டனர்.

இலங்கைத் தமிழர்கள் தமது பிரச்சினைக்கு சமாதான தீர்வுகள் கிடைக்கும் என்று கருதியே இலங்கையில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல்களிலும், பொதுத் தேர்தல்களிலும் தமது முதன்மையான அரசியல் உரிமையான வாக்குரிமையினை பயன்படுத்தி வந்தனர். இன்றும் பயன்படுத்தி வருகின்றனர்.

2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் வரை சிறுபான்மை இனத்தவரின் வாக்குகள் இலங்கையின் அரச தலைவர்களாக வந்தவர்களுக்கு நிச்சயம் தேவைப்பட்டது. 2015ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் இதற்கு தக்க சான்றாகும். சமாதான தீர்வு முயற்சிகளை கையில் எடுத்துக்கொண்டு, தமது வாக்கு வங்கிகளை நிரப்பி, வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்த பின்னர் இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்றுமில்லை எனக் கூறிய தலைமைகளும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே இருக்கிறார்கள் எனக் கூறுங்கள் - அவர்களை அழைத்து வருகின்றேன் எனக் கேட்ட தலைமைகளுமாக சிறுபான்மைத் தமிழர்களின் நம்பிக்கைகள் அடியோடு தகர்த்தெறியப்பட்டன. இறுதியிலே சிறுபான்மை இனத்தவரின் ஆதரவு இன்றியும் எம்மால் வெற்றிபெற முடியும் என்பதை 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நிரூபித்துக் காட்டிய பின்னர் தந்தை செல்வா கூறியது போல தமிழர்களை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம்.

இவ்வேளையில் தான் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தேர்தலுக்கு நாம் அனைவரும் முகம் கொடுத்து நிற்கின்றோம் கடந்த காலங்களைப் போலல்லாது பொருளாதார நெருக்கடியிலிருந்து தாய்த் திருநாட்டை மீழெளச் செய்யக்கூடிய ஒரு தலைமைத்துவத்தையே மக்கள் அனைவரும் எதிர்பார்த்து நிற்கின்றனர். தமிழ் மக்கள் சார்பிலும் எமது இனத்தின் இருப்பை உறுதிப்படுத்த பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளார். காலாதிகாலமாக புரையோடிப் போன எதிர்பார்ப்புகளுடன் இம்முறையும் தமிழ்ம் மக்களாகிய நாம் வாக்களிக்கப் போகின்றோம். விடிவு கிடைக்குமா...?

**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**

# தோல்வியடையாத மகிழ்ச்சியைத் தரும் கடவுளுடனான நட்புறவு

கடவுளுடனான நட்பு என்பது மற்ற எல்லா மனித உறவுகளிலும் பிரதிபலிக்கிறது என்றும், அது ஒருபோதும் தோல்வி யடையாத மகிழ்ச்சியை நமக்குத் தருகின்றது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்

"மிக முக்கியமானதைத் தேடவில்லை என்றால் நாம் எதைத் தேடுகின்றோம்?" என்ற தலைப்பில் ரிமினியில் ஆகஸ்ட் 20 முதல் 25 வரை நடைபெற உள்ள 45 ஆவது "மக்கள் மத்தியில் நட்புறவை வளர்த்தல்" கூட்டத்திற்கு அனுப்பியுள்ள செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மிக முக்கியமானவற்றில் கவனம் செலுத்துவது என்பது நம் வாழ்க்கையை நம் கைகளில் எடுத்துக்கொள்வதற்கு உதவுகின்றது என்று எடுத்துரைத்துள்ள திருத்தந்தை அவர்கள், அன்பு, கருணை மற்றும் இரக்கத்தின் ஒரு கருவியாக நம்மை மாற்றுவதற்கும் அது உதவுகின்றது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிக்கலான காலங்களைக் கடந்து செல்லும்போது, வாழ்க்கை மறைபொருளின் முக்கியம், எதார்த்தம் எது என்பதைத் தேடுவது மிக முக்கியமானது என்றும், பல்வேறு பிரச்சனைகள் மற்றும் சவால்களால் சக்தியற்ற உணர்வு, செயலற்ற மனப்பான்மையினால் நமது "வாழ்க்கை இழுத்துச் செல்லப்படும் சூழலில் இன்றை யமையாததை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் கூறினார் திருத்தந்தை.

மனிதகுலத்தை குணப்படுத்துகின்ற மற்றும் மாற்றுகின்ற ஆற்றல் நம் ஒவ்வொருவரின் இதயங்களில் மலர்கின்றது என்று குறிப்பிட் டுள்ள திருத்தந்தை அவர்கள், அமைப்பாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் அன்புடன் தனது ஆசீரை அனுப்புவதாகவும் செபிப்பதாகவும் எடுத்துரைத்துள்ளார்.

# அமைதியின் நற்செய்தியை அறிவிக்க அனைவரும் அழைக்கப்படுகிறோம்!

**- திருத்தந்தை**

எல்லா மனித இனத்திற்கும், முன்னெப்போதையும் விட இன்று, அமைதியின் நற்செய்தி அதிகம் தேவைப்படுகிறது என்றும், ஒவ்வொரு கிறிஸ்தவரும் இந்த அமைதியின் நற்செய்தியை அறிவிக்கவும் பகிர்ந்து கொள்ளவும் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் கடிதம் ஒன்றில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

உலக அமைதிக்காக 'ரிமினியில் உள்ள சதுக்கத்தில் பத்தாம் ஆண்டு செபமாலை நிகழ்வை நடத்தும் 'துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கான நாசரேத் அமைப்பு ஒன்றுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார் திருத்தந்தை.

அன்பான பிறரன்புப் பணிகள், நெருக்கம் மற்றும் குறிப்பாக அநீதி, அடக்குமுறை, வெறுப்பு மற்றும் பேராசை ஆகியவற்றால் காயமடைந்த மக்களின் வலியுடன் ஒன்றிணைந்ததற்கான உங்கள் சாட்சியத்திற்கு நன்றி என்று உரைத்துள்ளார் திருத்தந்தை.

இந்நிகழ்வில் பங்குபெறும் அனைவரும், இறைவேண்டலின் தருணங்களில், ஆர்வமிகுந்த இதயங்களுடன் அனைவருக்கும் மரியாதை, வரவேற்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய உடன்பிறந்த உறவுக்கான கலாச்சாரத்தை ஊக்குவிப்பவர்களாக இருப்பார்கள் என நான் நம்புகி றேன் என்றும், இங்குதான் ஒன்றிப்பின் அப்பத்தையும் மகிழ்ச்சியையும் காண முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை.

அன்னை கன்னி மரியாவின் உதவியை நாடுமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன் என்று அறிவுறுத்தியுள்ள திருத்தந்தை, அமைதியும் நல்லிணக்கமும் நிறைந்த எதிர்காலத்தை எதிர்நோக்கத் துணிவதற்கான நம்பிக்கையின் ஒளியை நம் ஆன்மாக்களில் ஏற்றி வைப்பவராக அவர் இருக்கட்டும் என்று உரைத்துள்ளார்.

### கரவை தேவமாதா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வர் அருட்பணி கிருபாகரன் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் நற்கருணை ஆசீர்வாதத்தை சக்கோட்டை பங்குத் தந்தை அருட்பணி ஜோதி நாதன் வழங்கினார். 15.08.2024 வியாழக்கிழமை காலை கரவை பரலோக அன்னையின் திருநாள் திருப்பலியை எமது முன்னை நாள் பங்குத்தந்தையும் தற்போ தைய அடைக்கல அன்னை ஆலய பங்குத் தந்தை யுமான அருட்பணி ஆனந்தகுமார் அவர்கள் நிறைவேற்றினார்.

அவருடன் இணைந்து அ.ம.தி சபை அருட்பணி டிலோசன் அவர்களும் மண்ணின் மைந்தன் அருட்பணி குணநாயகம் அவர்களும் பங்குத் தந்தை அருட்பணி விஜின்ரஸ் அவர்களும் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.பின் அன்னையின் திருச்சுருப பவனியும் ஆசீரும் இடம்பெற்றது.

### யாழ் மறைமாவட்ட. சர்வமத...

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

நோக்கிலானா செயற்திட்டங்கள் முன்மொழியப்பட்டன. இக்கூட்டத்தில் யாழ். நாகவிகாரை விமதர்ம தேரோ, ரலிம் மௌலவி, யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் ஆகிய இணைத்தலை வர்களும் முப்பது வரையான அங்கத்தவர் களும் கலந்துகொண்டனர். 2018 ஆம் ஆரம்பிக்கப்பட்ட இவ்விருது வழங்கும் நிகழ்வு நான்காவது தடவையாக இவ்வருடமும் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் மறைமாவட்ட பங்குகள் ரீதியாக பல துறைகளிலும் பணியாற்றும் கலைஞர்களின் பணியின் பெருமைகளை வெளிக் கொணர்வதாகவும் இந்நிகழ்வு அமைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.


### யாழ் கலைஞர்களுக்கு....

(1ம் பக்கத் தொடர்ச்சி..)

தொடர்பு ஆணைக்குழுக்கள் தமக்கு வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் கலை ஞர்களை இவ்விருது பெறுவதற்காக தெரிவுசெய்து அனுப்பியிருந்தார்கள்.

அந்தவகையில் யாழ். மறைமாவட்டத்திலிருந்து நால்வர் இவ்விருதுகளை பெற்றுக் கொண்டார்கள். இசைத்துறையில் ஆனைக் கோட்டை பங்கை சேர்ந்த திரு. மடுத்தீனுப்பிள்ளை யேசுதாசன் அவர்களும், நாடகத்துறையில் பாசையூர் பங்கைச் சேர்ந்த திரு. பிரான்சிஸ் யூல்ஸ் கொலின் மற்றும் மெலிஞ்சிமுனை பங்கை சேர்ந்த திரு. அந்தோனி யேசுதாஸ் ஆகியோரும், ஊடகதுறையில் பாண்டியன்தாழ்வு பங்கைச் சேர்ந்த திரு. கி.செல்மர் எமில் அவர்களும் இவ்விருதுகளை பெற்றுக்கொண்டார்கள்.

2018ஆம் ஆரம்பிக்கப்பட்ட இவ் விருது வழங்கும் நிகழ்வு நான்காவது தடவையாக இவ்வருடமும் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் மறைமாவட்ட பங்குகள் ரீதியாக பல துறைகளிலும் பணியாற்றும் கலைஞர்களின் பணியின் பெருமைகளை வெளிக் கொணர்வதாகவும் இந்நிகழ்வு அமைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



# காலங்கள் கடந்தாலும் நினைவுகள் கடப்பதில்லை

## காணாமல் ஆக்கப்பட்ட என் அன்பு அண்ணா அருட்பணி. ஜிம்பிறவுண் நினைவாக...

நிலையில்லா இவ்வுலகில் நினைவுகளை மட்டுமே சிலர் விட்டுச் செல்கின்றனர். 20.08.2006 அன்று எமது அண்ணா காணாமல் ஆக்கப்பட்ட நாள். காலங்கள் உருண்டோடி இன்று பதினெட்டு வருடங்கள்.

காலங்கள் கடந்தாலும் நினைவுகளால்
எம் உள்ளத்தில் வாழும் என்அண்ணாவிற்கு!
உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுந்த சில வரிகள்!

**மறக்க முடியாத நாள்!**
**மா துயர் தந்த நாள்!**
**எம் வீட்டின் தலைமகனை**
**இறைவனின் நல் ஊழியனை**
**ஒளி வீசும் எம் அழகிய வதனத்தை**
**எம்மிடமிருந்து யார் பறித்தார்!**
**ஓலமிட்டுக் கதறியதே எம் குடும்பம்!**
**உண்மைகள் எங்கே புதைக்கப்பட்டன!**

ஊரில் அப்பாவும் அம்மாவும் தனித்திருந்த நேரம் அருட்பணியாளர்கள் கூடி எம் வீடு சென்றனராம். எம் பெற்றோர் வழமைபோல் வந்தோரை வரவேற்க முகமலர்ந்து சென்றிருப்பர்.

என்ன கொடுமை இது! உள்ளம் கொதிக்கிறது மகனைக் காணவில்லை என்ற செய்தி மட்டற்ற வியாகுலத்தைக் கொடுத்திருக்கும். அம்மாவின் கதறலும் அப்பாவின் குமுறலும் எம் உள்ளத்தை இன்னும் வதைக்கிறது.

கூடவே பிறந்தோம் அண்ணா, குதூகலமாய் வளர்ந்தோம் நீங்கள் குருமடம் செல்லும்வரை.
விடுமுறை நாட்கள் வந்து விட்டால் உங்கள் வருகைக்காக எத்தனை ஆயத்தங்கள்!
மணவீடு என்றாலும்
மாளிகை போல் ஆக்கிடுவார் அக்கா. விதம் விதமாய் சமையல் செய்து விருந்தோம்பி மகிழ்ந்திடுவார் அம்மா.
யார் செய்த குற்றமோ எல்லோரும் தனித்தனியே,
இந்த நாள் வந்ததுவோ!

நீங்கள் மறைக்கப்பட்ட செய்தி கேட்டு
உடைந்தே போய்விட்டோம்.

சின்னச் சின்னக் குறும்புகளை உங்களுடன் இணைந்து செய்தே மகிழ்ந்திருந்தார் இளைய சகோதரன் சின்ன அண்ணா.
அவரும் வெளிநாட்டில் இருக்கும் போதே ஓர் அருட்குருவின் அழைப்பு ஒன்று கிடைத்ததாம்:
"அண்ணாவைக் காணவில்லைத் தேடுகிறோம்!" திகைத்து நின்ற அவர் வலிகளை தன்னுள்ளே சுமந்து வந்தார். ஒருவரை ஒருவர் ஆற்ற முடியாது தன்னந்தனியே விம்மி நின்றோம்.

14.08.2006 அன்றுதான் நான் அண்ணாவை இறுதியாகச் சந்தித்தது பார்த்தது கதைத்தது. ஆங்காங்கே இரத்தக் கறை படிந்த வெள்ளை ஆடையுடன்
காயங்கள் பல சுமந்து வந்ததை அவர் கண்களில் கண்டேன்.
"எனக்கு ஒன்றும் இல்லை"
என்ற வார்த்தை எனக்கு ஆறுதலைத் தந்தாலும்
அவரது மறைமுகமான
பல வலிகள் என்னுள்ளே பொங்கி எழுந்தது. விழிகள் நிரம்பிக் கட்டி முத்தமிட்டேன். அதுவே அவரது கடைசி முத்தம் என்று அப்போது நான் உணரவில்லை.

இதயம் கனத்தது இப்போ எண்ணிப் பார்க்கின்றேன்.
இத்தனை வரையறையில்லாப் பல வலிகளுக்குள்ளும் அவரது கடமை உணர்வை நான் அனுபவித்தேன். விடுதியில் இருந்த என்னை ஆயர் இல்லம் கூட்டிச் சென்று அருட்பணியாளர்களின் பாதுகாப்பில்
ஒப்படைத்து விட்டு
"கவனமாய் இரும்" என்ற
இறுதி வார்த்தையுடன்
என்னை விட்டுச் சென்று விட்டார். மறைக்கல்வி நிலையத்தில் என் சக நண்பர்களுடன்

மிகவும் பயங்கரமான சூழலுக்குள் செபத்திலும் இறை வேண்டலிலும் வாழ்ந்து வந்தோம்.

21.08.2006 அருட்தந்தையர்கள் என் நண்பர்களுடன் என்னைக் காண வந்திருந்தார்கள் எல்லோரும் என்னைச் சுற்றி இருந்தார்கள்.
எல்லோரது கண்களும் என்னையே உற்று நோக்கி நின்றன. எதுவும் புரியவில்லை. இதயம் பன்மடங்காய் அடிக்கத் தொடங்கியது. இனம் புரியாத ஒரு பாரத்தை உணர்ந்தேன்.
"அண்ணா அல்லைப்பிட்டிக்குள் போனவர் திரும்பி வரவில்லை" அருட் சகோதரர் தொடங்கினார்!
எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கதறினேன், சத்தமிட்டேன், கூக்குரலிட்டேன்!
'என் அண்ணா எங்கே?' யாருக்கும் பதில் சொல்ல முடியவில்லை.

**கலிஸ்ரா மில்ரன் (சகோதரி)**
**லண்டன்**

எல்லோரும் மௌனமாய் என்னோடு அழுதது மட்டும் எனக்கு தெரிந்தது.
இன்று வரைக்கும் அதே கேள்விதான்!


அண்ணா நீங்கள் எங்கே? வலிகளைச் சுமந்து கொண்டே எம் வாழ்வு கடந்து செல்கிறது இப்போது நான் எழுதும் ஒவ்வொரு வரியிலும் என் கண்ணீர் உள்ளது அண்ணா. ஏன் இந்த மௌனம்? முதல் பணித்தளம் மன்னார் சென்றபோது குட்டித் தம்பியையும் கூட்டியே சென்றீர்கள். பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு அன்புத் தந்தையாய் இருந்து அன்பும், ஆறுதலும், அறிவும், அரவணைப்பும், கொடுத்து வளர்த்தீர்கள். பணித்தள மாற்றத்தால் தம்பியை அன்ரியுடன் விட்டுவிட்டு யாழ். சென்றீர்கள். மிகக் குறுகிய நாட்களின் பிரிவிலே உங்களைக் காணவில்லை என்ற செய்திகேட்டு அவர் நொந்து நொறுங்கிப் போனாரே!

காலங்கள் கடந்தாலும் நினைவுகள் என்றும் எம்மோடு வாழ்கின்றன. இறை பணிக்கான உம் அர்ப்பண வாழ்வின் மூலம் இறைவனின் நல்ல ஊழியனாய் உம்மை எமக்குத் தந்த இறைவனுக்கு நன்றி கூறி இன்னாளில் இறை பதம் சரணடைகின்றோம்.

# நாம் எவற்றைப் பகிரலாம்?

நற்கருணை உணவு நாம் செய்ய வேண்டிய பகிர்தலை எமக்கு தொடர்ந்து நினைவூட்டுகின்றது. பிறர் வாழ்வு நிரப்பப்படாததற்கு நிறைவடையாமல் போவதற்கு நம்முடைய பகிராமையே காரணமாகின்றது. நம் இறைவன் உணவானார். தன் அன்பை, தனது உடல் இரத்தத்தை பகிர்ந்தார். பகிர்ந்து வாழுகின்ற பண்பு இறைவனுக்கு விருப்பமான அவருடைய மனதிற்கு உகந்த நற்செயல் இறை தந்தை உலக மாந்தர்களோடு தன்னைப் பகிர்ந்து கொண்டார் எவ்வாறெனில், அழகிய உலகை மனிதனுக்காக தயார் செய்து படைப்புக்களில் இறுதியாகவும் உயரிய படைப்பாகவும் மனிதனைப் படைத்தார். மனிதனைத் தம் உருவிலும் சாயலிலும் படைத்து, தனது உருவையும் சாயலையும் மனிதனோடு பகிர்ந்தார். எனவே பகிர்வின் நிறைவே இறைவன் இறை மகன் இயேசு பிறந்த மகிழ்வின் செய்தியை வானதூதர்கள் வயல் வெளி இடையர்களோடு பகிர்ந்து கொண்டார்கள். தீவனத் தொட்டியில் கிடத்தி இருந்த குழந்தையைக் கண்ட இடையர்கள் அந்த நற்செய்தியை தங்கள் அயலாருடன் பகிர்ந்து கொண்டனர். நெடுந் தொலைவில் இருந்து வந்த ஞானியர் தங்கள் உடைமைகளை திருக் குடும்பத்தோடு பகிர்ந்து கொண்டனர்.

அடிமையின் வடிவான மனித உருவை ஏற்று மனித குலத்தின் பாவத்தின் விளைவுகளை சிலுவைச்சாவின் மூலம் ஏற்கும் அளவிற்கு தம்மைத் தாழ்த்தி தன்னை பாவிகளான எம்மோடு பகிர்ந்து கொண்டார். மேலும் தனது உடனிருப்பை வெளிப்படுத்தும் விதமாக திருவுடல் திரு இரத்தத்தினை அப்ப இரச குணங்களில் நற்கருணையில் பகிர்கின்றார். இவ் நற்கருணையிலுள்ள திரித்துவத்தின் ஒன்றிப்பு சமத்துவ சகோதரத்துவ ஒன்றிப்புணர்வை வெளிப்படுத்தி எமது பகிர்தல் மூலம் நமது நெருங்கிய



சுற்றமும் - நட்பும் சார்ந்த சிறிய வட்டத்திற்கும் அப்பாற்பட்டு தாழ் நிலையில் உள்ளவர்களை எளியவரை இன்றியமையாத் தேவையோடு உள்ளவர்களை கருத்தில் கொண்டு பகிர்ந்திட நாம் முன்வர வேண்டுமென்கின்றது.

"பகிர்தல்" இதனை செயலாக்கப்படுத்த வேண்டுமென்பது இன்று காலத்தின் தேவையாகவும் இருப்பதனை நாட்டின் பொருளாதார நிலை எமக்கு உணர்த்துகின்றது. இருப்பதை பகிர வேண்டும். இருப்பதை பகிர்ந்தவராக சக்கேயுவையும், இருப்பதையே பகிர்ந்தவராக ஏழை கைம்பெண்ணையும் காணலாம். காணலாம். இருப்பதைப் பகிர்ந்து இறுதியில் தனது இரத்தத்தையும் உடலையும் பகிர்ந்த மனிதராக இயேசுவை நாம் காணலாம்.

**நாம் எவற்றைப் பகிரலாம்.?**

1. அன்பினை பகிரலாம்.
2. ஆறுதல் தரும் வார்த்தைகளை பகிரலாம்.
3. நேர்மறையான சொல், செயல், சிந்தனைகளை பகிரலாம்.
4. இறைவன் தந்த ஆற்றல்களை பகிரலாம்.
5. எமது உடனிருப்பை பகிரலாம்.
6. மகிழ்வினை பகிர்ந்து கொள்ளலாம்.
7. உடைமைகளை பகிரலாம்.
8. இறைவார்த்தையை பகிரலாம்.
9. மறை அறிவினை பகிரலாம்
10. எமது முன்மாதிரிகையான வாழ்வின் மூலம் இயேசுவை பிறருக்கு பகிரலாம்.

**பிறிக்காட் சரோனி**

# தீர்ப்பிடுவது எளிது



வீதியில் நூல் பிடித்ததுபோல் தண்ணீரால் கோடு போட்டுக்கொண்டு போன குடிநீர் வண்டியைப் பார்த்தபோது டேவிட்டுக்கு கோபம் கோபமாக வந்தது!

தண்ணீர்க் குழாயை ஒரு சுற்றுச் சுற்றி இறுக்கி விட்டிருந்தால் இத்தண்ணீர் கொட்டியிருக்குமா? இந்தக் குடிநீரைச் சுத்தப்படுத்த எத்தனை இலட்சம் ரூபாவை அரசு செலவழித்து குளோரின் இட்டு சுத்திகரித்திருப்பார்கள். இது பொதுச் சொத்தல்லவா? நானும் நீங்களும் கொடுத்த வரிப்பணமும் அல்லவா? தண்ணீர்க் குழாய் சரியாக மூடப்படாமல் போன குடிநீர் தாங்கி லொறியின் சாரதியை இழுத்து வைத்து அடிக்க வேண்டும் போல் உள்ளது என உள்ளம் குமுறிக்கொண்டான் டேவிட். டேவிட்டின் கோபம் தலைக்கு ஏறுவதற்கு முன் லொறி தூரத்தில் ஒடி மறைந்து விட்டது.

துவிச்சக்கரவண்டியை தாழ்வாரத்தில் நிறுத்திவிட்டு வீட்டுக்குள் நுழையப்போன டேவிட்டின் செவிகளில் அவர் அன்பு மனைவி தன் மகனிடம் புலம்பிக் கொண்டிருப்பது கேட்டது!

"உன் அப்பனுக்கு எத்தனை முறை சொல்லுவது, அவர் புத்தியில் ஏறாது, சமையலறை தண்ணீர்க் குழாயை திருத்திவிடுமாறு சொல்லி ஒரு வாரமாகிறது. இன்னும் அவர் குடிநீர்க் குழாயைத் திருந்தவில்லை. இப்படி ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு தந்தை இருந்தால் ஏன் தண்ணீர்ப் பஞ்சம் வராது?" என்று மனைவி கூறு வதைக் கேட்டபோது யாரோ கன்னத்தில் அடிப்பது போல இருந்தது டேவிட்டுக்கு! அப்போதே கையோடு சென்று புதிய குடிநீர்க் குழாயைப் பொருத்தி சீர்செய்து விடுகின்றார்.

**ஒவ்வொருவரும் சரியாக நடந்துகொண்டால் இவ்வுலகில் தீர்ப்பிடவும், தீர்ப்பிடப்படவும் யாரும் இருக்க மாட்டார்கள்.**

# அன்பின் மகிழ்வு




### உன் தந்தையையும் தாயையும் மதித்து நட

நம் திருத்தந்தை அவர்கள் குடும்பத்தில் பெற்றோர், பிள்ளைகள் மட்டில் கொண்டிருக்க வேண்டிய கடமை பிள்ளைகளுக்கு உயர்ந்த ஞானத்தையும், கல்வியையும் வழங்குவதாகும். குடும்பத்தில் உள்ள தந்தை தன் பிள்ளைகளைக் கண்டித்துத் திருத்தி அவர்களுக்கு அறிவு புகட்டவேண்டும் (நீதிமொழிகள் 3 : 11-12). பிள்ளைகளும் தங்கள் தந்தையர் கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். தாயின் அறிவுரைகளைப் பிள்ளைகள் புறக்கணிக்காது அவற்றைக் கழுத்துக்கு மாலை போல அணிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் தாய், தந்தையர் அறிவுரைகள் பிள்ளைகள் நடக்கும்போது அது அவர்களுக்கு வழிகாட்டும். படுக்கும் போது அது அவர்களைக் காவல் காக்கும். விழித்திருக்கும் போது அது பிள்ளைகளுடன் உரையாடும் (நீதிமொழிகள் 6 : 20-23). எனவே ஞானமுள்ள பிள்ளைகள் எப்போதும் தந்தையளிக்கும் நம்பயிற்சியை ஏற்றுக்கொள்வார்.

ஞானம் உள்ள பிள்ளை தன் தந்தையின் கண்டித்தலைப் பொருட்படுத்த மாட்டார். எனவே பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் வழிகாட்டுதல் ஞானம் எனக் கருதிக் கடைப்பிடிக்க வேண்டும். சிறப்பாகப் பிள்ளைகளை அன்பு செய்யும் பெற்றோர் எப்பொழுதும் அவர்களைக் கண்டித்து, திருத்த வேண்டும். பிள்ளைகளைச் சரியான நேரத்தில் கண்டித்துத் திருத்தாத பெற்றோர் பிள்ளைகளை அன்பு செய்யவில்லை என்பதே அர்த்தமாகும் (நீதிமொழிகள் 13:24).

பிள்ளைகளின் இதயத்தில் மடைமை எப்பொழுதும் ஒட்டிக் கொண்டிருக்கும். ஆனால், கண்டிப்பால் பெற்றோர் இதனை அகற்றி விடலாம் (நீதிமொழிகள் 22:15). எனவே தான் நீதிமொழிகள் கண்டிப்பைப் பற்றிக் கூறும்போது இவ்வாறு கூறுகின்றது "பிள்ளைகளைக் கண்டித்துத் திருத்த தயங்காதே. பிரம்பினால் அடித்தால் அவர்கள் சாகமாட்டார்கள். நீ பிரம்பினால் அவர்களை அடித்தால், அவர்களைப் பாதாளத்துக்கு தப்புவிக்கிறவனாவாய்" (நீதிமொழிகள் 13-14). தன் பிள்ளைகளைக் கண்டித்து திருத்தும் பெற் றோர் பிள்ளைகளினால் ஆறுதல் அடைவர். பெற்றோரின் மனதை மகிழ்விப்பார் (நீதிமொழிகள் 29-17). எனவே ஞானநூல்களின்

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

பாரம்பரியம் பிள்ளைகளைக் கண்டித்து திருத்த வேண்டிய மிகப் பெரும் பொறுப்பை எடுத்து இயம்புகின்றது. பல குடும்பங்களில் பெற்றோர் தம் பிள்ளைகளை அன்பு செய்கின்றோம் என்ற போர்வையில் பிள்ளைகளைக் கண்டிக்காத போது பிள்ளைகளின் அழிவுக்குப் பெற்றோர் காரணமாவதை நாம் தற்போது சமூகத்தில் காணுகின்றோம்.

"தந்தையரே! உங்கள் பிள்ளைகளைச் சினம் கொள்ளச் செய்யாமல் அவர்களை அன்பிலும், ஒழுக்கத்திலும் இறைபோதனைகளிலும் வளர்த்து வாருங்கள்" என்று புனித யோண் கிறஸ்தோஸ்தம் அழைப்பு விடுக்கின்றார். "இளைஞர்களை நேசிப்பது மட்டும் போதாது. அவர்கள் நேசிக்கப்படுகிறார்கள் என்பதனை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். திருத்த வேண்டிய வேளையில் அவர்களைத் திருத்துங்கள். பொறுமையுடன் அவர்களுக்கு அறிவுரை கூறுங்கள். எப்போதும் அவர்களின் நன்மையை மட்டுமே நாடுங்கள்" என்று புனித ஜோண் போல் கூறுகின்றார்.

எனவே, ஓர் கிறிஸ்தவ குடும்பத்தில் பிள்ளைகளைக் கண்டித்து திருத்தி அறிவுரை கூறி அவர்களை நல்ல பிள்ளைகள் ஆக்குவது மிக முக்கியமான ஓர் கடமையாகும். எனவே, திருமடல் கூறுவதுபோல் எம் பிள்ளைகளை அன்புடன் திருத்தி நல்ல பிள்ளைகளாக்க முயலுவோம்.

**"பெற்றோர்களே! எப்போதும் உங்கள் பிள்ளைகளை மென்மையாகத் திருத்துங்கள். தேவையான போது தண்டியுங்கள். ஆனால், ஒருபோதும் அவர்களின் முகத்தில் அறையாதீர்கள். காரணம் இதனால் அவர்களின் மாண்பு பாதிக்கப்படுகின்றது. கண்டிப்பின் போதும் பிள்ளைகள் தங்கள் மாண்மை உணர வேண்டும்'**

*- திருத்தந்தை பிரான்சிஸ்*

## அகவொளி குடும்ப நலமையம்
## திருமண சேவை



### மணமகள் தேவை

வயது : - 37
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- O/L
தொழில் :- AC மொக்கானிக்
பிரதேச செயலகம் - நல்லூர்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
படித்த பெண்

வயது - 34
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - O/L
தொழில் :- சாரதி
பிரதேச செயலகம் :- நல்லூர்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
படித்த பெண்

வயது - 33
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - Diploma in Marketing
தொழில் :- Medical Representative
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
படித்த பெண்

### மணமகன் தேவை

வயது - 33
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - Electrical Engineer
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்
வாழ்க்கைத்துணை பற்றிய எதிர்பார்ப்பு:
வைத்தியர், தாதி, பொறியியலாளர் எதிர்பார்க்கப்படுகிறது.

வயது - 33
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் :- ஆட்டோ சாரதி
பிரதேச செயலகம் :- மிருசுவில்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
சாதாரண படிப்பு

வயது - 40
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - N.V.Q. Level 04
தொழில் :- Plant Technician
பிரதேச செயலகம் :- கிளிநொச்சி

வயது - 42
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - Diploma in Logistics
தொழில் :- அவுஸ்ரேலியா
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
நல்ல குடும்பப் பெண்

**இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்அகவொளி குடும்ப நல மையம் புனித பத்திரிசியார் வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கங்கள் 077 - 904 7651, 021- 222 2856, 077- 942 2970.**

## சந்ததிக்கும் அடைக்கலம் நீயே அம்மா!



முத்து மணி இரத்தினமே – எங்கள்
முழுமதியே இலங்கு புகழ்
– அடைக்கலமே தாயே!
தஞ்சமென்ற எம்மவரை தரணியிலே நீயே,
தயையுடனே காத்து நிற்கும் இன்பத் திருமகளே!
ஒப்பில்லா இறையவனை ஈன்றிடவே இடமளித்து,
ஒரு பெரும் கடவுளுக்கே அடைக்கலமாய் ஆனவளே!!
தாயே! கண்கள் பனிக்குதம்மா நின்னிரக்கம் கண்டு,
வாயே வலிக்குதம்மா நின் பெருமை கூறி,
நானூறு ஆண்டுகளாய் நம் தமிழர் மண்ணும்
நலங்கள் பல பெற்றிடவே இறை ஆசி பெருக,
வருகின்றோம் நின்பாதம் தமியர் நாம் கூடி,
வரங்கள் கிடைக்குதம்மா வாழ்விதனையேக!
ஆன்மீக வாழ்வுதனை அழகாக்கித் தந்தாய்
ஆயர்கள் மூவரை நீ திருஅவைக்கு சமைத்தாய்
குருக்கள் துறவியரும் உன்னின்று உதித்தார்
குவலயமும் வாழ்ந்திடவே பல சீர் தந்தாய்
யாழ் நகரின் மையமதில் நம்பிக்கையின் சின்னம்,
உனது தலம் பெருமை தரும் வானுயர்ந்து நின்று!!
அம்மா! அடைக்கலமே உன் அன்பைச் சுவைத்தேன்
அன்பர் இயேசுவின் அறவழிகள் கண்டேன்
உன்னை என்னகத்தே உறைய வைத்தேன் தாயே!
உலகிலெங்கு சென்றாலும் உன் முகத்தை மறவேன்
சத்திய வேதமதன் வழிதாங்கி நானும்
சந்ததிக்கும் உனைக்காவி களித்திருப்பேன் அம்மா!!

**பப்சி மரியதாசன்**


## அசைவுகளும், மாற்றங்களும்!

அசைவுகளும், மாற்றங்களும் அடங்கியதுதான் வாழ்க்கை. வாழ்க்கை உயிர்ப்புத்தன்மையோடு உலாவருவதற்கு இதுதான் அடிப்படை. அறிவால் ஏற்படுகிற மாற்றம் மூளையோடு முகம் காட்டுகிறது. உணர்வால் ஏற்படுகின்ற மாற்றம் இதயத்தோடு இனம் காட்டுகிறது. வாழ்க்கையை நோக்கி ஓடிக்கொண்டிருப்பதுதான் நமது போராட்டம். ஓடும்போது ஒரு நொடி திரும்பினாலும் இன்னொருவர் நம்மைத் தாண்டி ஓடிவிடுவார். இந்த இலட்சியத் தோடும், போராட்டத்தோடும் வாழ்க்கையைச் சந்திக்க வேண்டும். அதில் வெற்றி தோல்வி என்பது தவிர்க்கமுடியாதது. நம் வெற்றிகளுக்கும், தோல் விகளுக்கும் நாமே காரணம். இருக்கட்டும் இதுவரை நாம் இழந்தவைகளெல்லாம். இனி பெறப்போகும் வெற்றிகளுக்காக உழைப்போம்.

## சோகம்

"எழுவோம் என்பதில் நம்பிக்கை இருந்தால் விழுதல் என்பது சருகல்ல". கவலைகள், துயரம், தோல்விகள் யாவும் வானில் அலையும் மேகங்கள் கலைவதுபோல கலைவதும் நிச்சயம். அழுகின்ற வினாடியும் சிரிக்கின்ற நிமிடங்களும் நம் வாழ்க்கை என்ற காலக் கடிகாரத்தில் நிரந்தரமாக அமைவதில்லை. எனவே எதற்கு நம்மில் சோகங்கள்? செய்வது எல்லாமே தெய்வம்தான். அதிலே நம்முடைய ஒரு பங்கு இயேசுவின்பால் உள்ள இறை நம்பிக்கைதான். அதை அன்றாடம் அழுப்படுத்த முயற்சிப்போம். நம்மைத் தவிர யாராலும் இவ்வுலகில் நம்மை மகிழ்விக்க முடியாது. எனவே, சோகம் விடுத்து மகிழ்வைச் சொந்தமாக்கிக் கொள்வோம்.

*நன்றி : இந்தநாள் இனிய நாள்*




# என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

(சுதன், கொழும்பு)

**கே: மனைவியுடன் அதிகமாகப் பேசுவது நல்லது என்று அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சொல்லப் பட்டிருப்பதாக அறியக்கூடியதாக இருக்கின்றது. அதுபற்றி ஏதும் மேலதிக தகவல்கள் உண்டா?**

ப: சுதன், மனைவியுடன் அதிகமாகப் பேசுவது மனிதனின் இதயத்திற்கு நல்லது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதோடு 80 வீதம் பேருக்கு மன உளைச்சலும், 90 வீதம் பேருக்கு மாரடைப்பும் குறைவதாகவும் அதனால் ஆயுள்காலம் அதிகமாகின்றது எனவும் அவ்வாய்வில் தெரிவிக்கப் பட்டுள்ளது என்பது உண்மை. ஆனால் அவ்வாய்வில் யாருடைய மனைவியுடன் என்று தெளிவுபடுத்தப்படவில்லை என்ற ஒரு தகவலும் உண்டு.

(தருண், யாழ்ப்பாணம்)

**கே: தமிழ்ப் பொது வேட்பாளர் குறித்துத் தமிழ் மக்களிடையேயே பெரும் சலசலப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் வெல்வதற்கு வாய்ப்புக்கள் இல்லை என்று கூறுகின்ற அளவில் தான் நிலைமை இருக்கின்றது. அப்படி இருக்கையில், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முயற்சியால் என்ன பயன், என்ன நன்மை கிடைக்கப்போகின்றது என்று பலரும் கேட்கின்றார்கள்! இதுபற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?**

ப: தருண், அவ்வாறு மக்கள் கேட்பதில் நியாயம் உண்டு! அதேவேளை இக்கேள்வியையே இன்னுமொரு வகையில் கேட்டுப் பார்ப்போமே! 1982 தொடக்கம் எட்டு ஜனாதிபதித் தேர்தல்கள் நடந்திருக்கின்றன. குறிப்பாக, ஆயுதப் போர் மௌனிக்கப்பட்டு 2010, 2015, 2019 ஆகிய ஆண்டுகளில் மூன்று தடவைகள் ஜனாதிபதித் தேர்தல்கள் இடம்பெற்றிருக்கின்றன. இத்தேர்தல்களில் நமது வாக்குகளைப் பெற்று, 'நிரந்தர அரசியல் தீர்வை நிச்சயமாகக் காண்போம்' என ஜனாதிபதியாக வந்தவர்கள், நமது அடிப் படைப் பிரச்சினைக்கு என்ன தீர்வை இதுவரையில் கண்டிருக்கின்றார்கள்? 'பட்டுவேட்டிக் கனவில் இருந்தபோது கட்டியிருந்த கோவணமும் களவாடப் பட்ட' நிலையில்தான் நம்மை இவர்கள் வைத்திருக்கின்றார்கள். இத்தலைவர்கள் இதய சுத்தியுடன் விரும்பியிருந்தால், நேர்மையுடன் முயற்சித்திருந்தால் போருக்குப் பின்னரான இப்பதி னைந்து ஆண்டுகாலப் பகுதியில் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வினை ஏற்படுத்தியிருக்க முடியாதா? முடியாமல் போனதற்கு என்ன காரணம்? அவர்களின் கடும் போக்கும், அடிமைப்படுத்தும் மனநிலையும், இனத்துவேஷமுமே! ஆகவேதான், போருக்குப் பின்னரான காலத்தில் ஒரு தேசிய இனமாக ஒரு ஜனாதிபதித் தேர்தலில் முதன்முதலாக அணிதிரண்டு நம் நாட்டுத் தலைவர்களுக்கும் சர்வ தேசத்திற்கும் சில செய்திகளைச் சொல்லுவதற்கும் எதிர்காலத்தில் ஒரு உறுதியான தரப்பாக இருந்து நமது உரிமைகளை வென்றெடுக்கும் நிலைமையை உருவாக்க இத்தேர்தலை நாம் பயன் படுத்தலாம் என்பது என் ஆணித்தரமான நம்பிக்கை.

(பிரியா, மன்னார்)

**கே: வெல்ல முடியாத ஒரு நபருக்கு - தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்குகளை அளித்து எதனைச் சாதிக்கப் போகின்றோம்!?**

ப: பிரியா, இதுவரை காலமும் சிங்களத் தலைவர்களை வெல்ல வைத்து எதனைச் சாதித்திருக்கின்றோம் என்பதையும் இவ்விடத்தில், இக்காலச் சூழலில் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இதுவரை காலமும் யார் வென்றார்? யாரை வெல்ல வைத்தோம்? நீங்களும் நானும் தமிழ் மக்களும் வாக்களித்துப் பதவிக்கு மாறி மாறி வந்த ஜனாதிபதிகள் இதுவரையில் நாம எதிர்கொண்டிருக்கும் பல்வேறுபட்ட அடிப் படைப் பிரச்சினைகளுக்கு என்ன தீர்வைக் கண்டிருக்கின்றார்கள்! அவ்வாறாயின், நமது வாக்குகளால் இதுவரை காலமும் அவர்களை வெல்ல வைத்து அவ்வெற்றியினால் நாம் தோற்கடிக்கப் பட்டுக்கொண்டே இருக்கின்றோம். இந்தப் பட்டறிவு இனியாவது நமக்கு வரவேண்டாமா பிரியா? ஆகவேதான், முதன்முதலாக, ஒரு தேசிய இனமாக அணிதிரண்டு, மல்லிகைப்பூத் திலகர் என்பவர் குறிப்பிட்டிருப்பது போன்று, "வெல்வதற்காக அல்ல சொல்வதற்காக" என்றதொரு பற்றுறுதியையும் முன்வைத்திருக்கின்றார்கள். தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முயற்சி வெற்றிபெற, குறிப்பாக, வட கிழக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளில் பல திறத்தாரும் தரத்தாரும் முயன்று வருகின்றார்கள். இதனை ஆதரிப்பதும், நமக்கான ஒரு பாதையை வகுப்பதும் நம் கைகளிலேயே இருக்கின்றது. செய்வோம், செயற்படுத்துவோம்.

(சசி, யாழ்ப்பாணம்)

**கே: 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் உங்கள் வாக்கு யாருக்கு?**

ப: சசி, சங்கே முழங்கு!

(அருள், யாழ்ப்பாணம்)

**கே: சில நல்ல வயதான தம்பதியினர், வயது முதிர்ந்த நிலையிலும் தமது துணைவரையோ, துணைவியையோ மிகவும் அன்பாக 'டாலிங்', 'செல்லம்' என்று அழைப்பதைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இன்றைய இளம் குடும்பத்தினர் இவ்வாறு தம் துணைவரையோ, துணைவியையோ அழைப்பதில்லை அல்லது அழைப்பது குறைவாக இருக்கின்றது! ஏன்?**

ப: அருள், ஒரு தடவை வயதுபோன ஓர் ஐயாவிடம் ஒருவர், "95 வயதாகியும் உங்கள் மனைவியை 'டாலிங்' என்றே அழைக்கின்றீர்கள்? காரணமென்ன?" என்று கேட்டதற்கு, அந்த ஐயா, 'பத்து வருசத்துக்கு முன்னேயே அவளுடைய பெயரை மறந்துவிட்டேன்! கேட்பதற்குப் பயத்தில் 'டாலிங் டாலிங்' என்றே பொதுவில் அழைத்து வருகின்றேன்!' என்றாராம். 'ஓல்ட் இஸ் கோல்ட்' (Old is gold) என்றொரு பழமொழி ஆங்கிலத்தில் இருக்கின்றது. பழமையில் உள்ள இரகசியத்தை பழையவர்கள் அறிந்திருப்பதால் அவர்கள் வயதாகியும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்!

(ரீனா, யாழ்ப்பாணம்)

**கே: 'என் கேள்விக்கென்ன பதில்' என்ற இப் பகுதியைப் படித்து வருகின்றேன். கேட்கப் படும் கேள்விகளுக்கு மிகவும் 'ரெக்னிக்கல்' ஆகப் பதில் சொல்கின்றீர்கள்? இப்படித்தான் நீங்கள் பேசுவதும் உண்டா?**

ப: ரீனா, என் பேச்சை நீங்கள் கேட்டு விட்டு 'ரெக்னிக்கல்'ஆக இருக்கின்றதா அல்லது 'ரென்சன்'ஆக இருக்கின்றதா என்று நீங்கள்தான் கூறவேண்டும். நிற்க, எல்லா விடயங்களையும் 'ரெக்னிக்கல்' (தொழிநுட்பக்) கண் கொண்டு பார்க்கின்ற இக்காலத்தில், எங்கள் நடவடிக்கைகள் கொஞ்சமாவது 'ரெக்னிக்கல்' ஆக இருக்கவேண்டும் என்பதால்தான், 'ரெக்னிக்கல்' ஆகப் பதில் சொல்கின்றேன்.

(கஜன், கிளிநொச்சி)

**கே: நீங்கள் அன்புராசா அடிகள் என்று அறியப்பட்டதிலும் பார்க்க, இப்போது 'ஆரிய சிங்க' வினால் அன்புராசா உள்நாட்டிலும் புலம்பெயர் தேசங்களிலும் அதிகமாக அறியப்பட்டிருக்கின்றார் என்று கூறலாமா?**

ப: கூறலாம்.

# "களம் தந்த களங்கம்"

ஓர் பார்வை

கடல் அலைகள் கொஞ்சம்
நகர்க் காவலரே வாழ்க!
கலை குலவும் விஞ்சுநகர்
கோமகனே வாழ்க!

**புனித யாகப்பரின் வரலாறு**

வாகைமேரோன் என்ற துருக்கிய மன்னன் அனைத்து நாடுகளையும் தன் காலடிக்குக் கீழ் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக பல நாடுகளுடன் போர் செய்து அந்தந்த நாடுகளைத் தன்வசப்படுத்தினான். வாகைமேரோன் மன்னனுக்கு ஸ்பானியா தேசத்தின் மீது ஆசை வந்தது. அனைத்து நாடுகளும் தனக்குப் பயந்து திறை கட்டுகின்றபோது இந்த ஸ்பானியா மட்டும் தனக்குப் பணியாமல் திறை கட்டாமல் இருப்பதைக் கண்டு மிகவும் கோபமுற்றான். அந்நாட்டில் இருக்கும் செல்வ வளத்தையும், கடல் வளத்தையும், அழகிய மாதர்கள் இருப்பதையும் கேள்விப்பட்டு ஸ்பானியா நாட்டு மன்னனுக்குத் திறை செலுத்துமாறு தூது அனுப்புகின்றான். திறை செலுத்த மறுத்தால் "போர்" என்று அறைகூவல் விடுக்கின்றான்.

ஸ்பானியா நாட்டு மன்னன் அங்குள் மக்களுக்குத் தேவையான உணவு, கல்வி, போக்குவரத்து என சகல வசதிகளையும் செய்து மக்கள் மனதில் நன்மதிப்பைப் பெற்றிருந்தான். மன்னன் வாகைமேரோனின் அறைகூவலைக் கேள்விப்பட்டு அவனுக்கு அடங்க மறுத்துப் போர் செய்கிறான் மன்னன் றெமில். மிகப் பெரிய படைகளுடன் வந்த துருக்கியப் படை மன்னன் றெமிலைத் தோற்கடித்து, தன் முன் அடிமைப்படுத்தப்பட்ட மன்னன் றெமிலை மன்னன் வாகைமேரோன் திறை கட்டப் பணிக்கின்றான். வருடா வருடம் உள்நாட்டு செல்வ திரவியங்களுடன் 100 கன்னிப் பெண்களைத் திறையாகத் தனக்குத் தரும்படி பணித்து ஒப்பந்தம் கோருகின்றான். மன்னன் தன் நாட்டு மக்களின் நலன் கருதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்றான்.

செய்வதறியாது மனக்குழப்பத்துடனும், சஞ்சலத்துடனும் நாடு திரும்பிய மன்னன் இரகசியமாக வருடா வருடம் திறை செலுத்தி வருகிறான். தான் திறை செலுத்



அ. றொக்சன்

துவதைத் தன் ஒரே ஒரு மகளுக்குச் சொல்லவேண்டாம் எனப் பணிக்கிறான். காலத்தின் கோலம் அது. அரண்மனைக்குள் வண்ணக் கிளி என சுதந்திரமாகப் பறந்து ஆடிப்பாடித்திரிந்த மன்னனின் மகளிடம் நாட்டுப் பெண்கள் எதிர்பாராத வண்ணம் சென்று தங்கள் பிரச்சினைகளைக் கூறுகின்றார்கள். தன் நாட்டிற்கும், பெண்களுக்கும் நேர்ந்த நிலையை எண்ணி வருத்திய இளவரசி தன் தந்தைமீது கோபம் கொண்டு உடனே விரைந்து தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றாள். தங்களைப் போன்று பயந்து ஒதுங்குவதற்கு நான் கோழை அல்ல எனக் கூறி தானே துருக் கிய மன்னன் வாகைமேரோன் அரண்மனைக்குத் திறையாகச் செல்கிறாள். இளவரசி தன்னிருப்பிடம் தேடி வந்ததை அறிந்து மகிழ்ச்சியுற்ற துரக்கிய மன்னன் அவள் அழகில் மயங்கினான். இளவரசிக்கும் துருக்கிய மன்னனுக்கும் வாக்குவாதம் அதிகரித்தது. இறுதியாக மன்னன் அவளை அடைவதற்கு முயற்சிக்கையில் இளவரசி தான் அணிந்திருந்த விச முத்துக்களைக் கடித்து உயிர் துறக்கிறாள். அரசன் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என மனம் நொந்தான்.

கவலையும், விரக்தியும் தினதி தினம் மனதளவில் செத்துக் கொண்டிருந்த மன்னன் அவன் மகள் இறந்த செய்தியைக் கேள்விப்படுகின்றான். மிகவும் கவலையடைந்த மன்னனும் மக்களும் சோகத்தில் ஆழ்ந்தனர். நாட்டினுடைய பெண்கள் தொகை குறைவடைய இறுதியாக யாஸ்திரிகர்கள் மட்டுமே எஞ்சியிருந்தார்கள். அவர்களையும் துருக்கிய மன்னனுக்கு அனுப்புவதையிட்டு வேதனையில் இருக்க அந்நாட்டு மக்களும், கன்னியாஸ்திரிகளும் மன்னனிடம் தம் பிரச்சினைகளையும் இன்னல்களையும் முறையிடுகிறார்கள். இறுதியாக எமது நாட்டுக் காவலரிடம் தஞ்சம் புகுவதைவிட வேறு வழியில்லை என உணர்ந்த மக்கள் மன்னனிடம் ஆலோசனை கூற மக்களும் மன்னனும் புனித சந்தியாகப்பரிடம் தமது இன்னல்களை மும் வேண்டுதல்களையும் முன்வைத்துச் செபிக்கிறார்கள்.

அன்று இரவு புனித சந்தியாகப்பர் அரசன் றெமில் கனவில் தோன்றி றெமில் நீ மனம் கலங்க வேண்டாம். நாளைய போரில் இந்தத் துருக்கியர்களை எதிர்த்து உன் சார்பாக நான் போராடுவேன். வெற்றி உனதே. நான் ஒரு வெள்ளைக் குதிரையில் வெள்ளை ஆடையில் சிலுவை அடையாளமிட்ட வெள்ளைக் கொடியோடு இந்தப் பெரிய துருக்கியப் படையுடன் போராடுவேன். இதை நீயும் உன் வீரர்களும், துருக்கிய வீரர்களும் காண்பீர்கள் என்று கூறி மறைந்து போனார். அரசன் கனவைப் பற்றித் தன் படைத்தளபதிக்கும் வீரர்களுக்கும் அறிவித்து, அந்த இரவிலேயே மதிப்பிற்குரிய மேற்றாணியாரிடம் சென்று கனவைத் தெரிவித்து வெற்றிக்கான ஆசீரும் பெற்றான்.

புனித சந்தியாகப்பர் கொடுத்த தைரியத்தினாலும், வாக்குறுதியினாலும் உத்வேகம் பெற்ற அரசனும் படையினரும் போர்களத்தில் பயங்கரமாகப் போரிட்டனர். போர்க்களத்தில் என்ன ஆயிற்று இந்தக் கிறிஸ்தவர்களுக்கு என்று ஆத்திரப் பட்டான் துருக்கிய மன்னன். இந்தச் சிறு படைகளை வைத்துக் கொண்டு தம்மை எதிர்க்க இவர்களுக்கு எங்கிருந்து தைரியம் வந்தது என எண்ணினான். போர் உக்கிரமடைந்தது. வெள்ளைக் குதிரை மீது அமர்ந்திப்பவரை எதிர்க்க முடியாமல் எதிரிகள் புறமுதுகிட்டுத் தப்பி ஓடினார்கள். இவ்வாறு புனிதரின் அருளும் பாதுகாப்பும் அந் நாட்டு மக்களுக்குக் கிடைத்தது.

மன்னன் றெமிலும் அந்நாட்டு மக்களும் போர்க்களத்தில் தம்மை மீட்ட சந்தியாகப்பரைப் புகழ்ந்தனர். சந்தியாகப்பர் வெள்ளை நிற உடையுடன் குதிரையில் போர்க்களத்தைச் சுற்றிச் சுற்றி வந்ததை அனைவரும் கண்டார்கள். புனித சந்தியாகப்பர் வாழ்க என வாழ்த்தினார்கள். புனித சந்தியாகப்பர் போராளி அப்போஸ்தலர் என்றும் படைமிரட்டி என்றும் இக்கதையைத் தழுவியே இக்கூத்து எழுதப்பட்டிருக்கின்றது.

(தொடரும்...)

# காண்பியக் கலைகளும் கிறிஸ்தவமும்

பணம், பேரரசுகள் போன்று மதமும் மனித குலத்தை ஒன்றிணைக்கும் பிரதான காரணியாகும். மத ரீதியான வேறுபாடுகளுக்கு அப்பால் மக்களைப் பெருந் திரளாக்கியதில் கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் போன்ற சமயங்கள் முன்னிலை வகிக்கின்றன.

இவ்வாறான மனிதகுலத் திரட்சிக்கு மதம் சார்ந்த காண்பியக் கலைகளின் பங்களிப்பு அளப்பரியதாகும். பெருந் திரளாக்கப்பட்ட மனிதகுலம் தனது இருப்பை நிலை நிறுத்தவும் அகலிக்கவும், இயங்கு நிலையில் இருப்பைப் பேணவும் மத வழிபாடுகளுக்கு அப்பாலும் மத வழிபாட்டுடன் இணைந்தும் கலைகளின் பங்களிப்பு தவிர்க்க இயலாதது என்பதை வரலாறு பதிவு செய்துள்ளது.

அகநிலை உணர்வான ஆன்மீகத்திற்கு புறநிலை வடிவத்தைக் கொடுப்பது மதமாகும். அகநிலையில் ஆன்மீக முதிர்ச்சி பெற்ற ஒருவருக்கு மதம் சார்ந்த புறநிலைத் தூண்டல்கள் அவசியமற்றவை ஆகும். அத்தகைய முதிர்ச்சி பெறாத ஒருவர் புறநிலைத் தூண்டல்களில் தங்கியிருப்பார். இத்தகைய புறநிலைத் தூண்டல்களை வழங்குவதில் கலைகள் முதன்மை பெறுகின்றன. இவ் அடிப்படையில் கிறிஸ்தவ சமயமும் தனது நிலைத்திருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள கலைகளை சாதகமாகக் கையாண்டுள்ளது.


காண்பியக் கலைகளில் உருவம் மற்றும் உள்ளடக்கம் தொடர்பான இத்தகைய மாற்றங்கள் காலத்தின் தேவைக்கேற்ப புறநிலைத் தூண்டிகளாக செயற்பட்டு மனித குலத்தை ஆன்மீக அடிப்படை நோக்கி வழி நடத்திச் சென்றுள்ளன.

தனி இறைக் கொள்கையைக் கொண்ட கிறிஸ்தவம், மனிதநேயம், தெய்வீகம், ஆன்மீகம், உடல், இயற்கை, இயற்கைக்கு அப்பாற்பட்ட அனைத்தும் கிறிஸ்துவில் ஒருங்கிணைக்கப்படுகிறது என்கிறது.

காலத்தின் தேவைக்கேற்ப புனிதர்கள் வழிபாடு, நற்கருணை வழிபாடு, வார்த்தை வழிபாடு என்பவற்றினூடாக புறவயத் தூண்டிகள் கிறிஸ்தவ பதத்தினுள் உள்ளடக்கப்படுகின்றன.

எல்லா மதங்களையும் போலவே கிறிஸ்தவமும் புறத் தூண்டிகளாகத் தொழிற்படும் கலை வடிவங்களை தனது நிலைத்திருப்பிற்காகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. அமானுஷ்யமான எல்லையற்ற சக்தியைக் கொண்ட கடவுளின் இருப்பை வரையறுக்கப்பட்ட வடிவங்கள் ஊடாக உணர்வுகள் ஊடாக நிலை நிறுத்திக் கொள்ள கலை வடிவங்களை கிறிஸ்தவ மத அமைப்புக்களும் கையாளுவதை வரலாற்றின் ஓட்டத்திலே அவதானிக்கலாம்.

காண்பியக் கலைகளான ஓவியம், சிற்பம், கட்டடம் ஆகியவை ஏனைய அனைத்துக் கலை வடிவங்களுக்கும் அடிப்படையானது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். காண்பியக் கலைகள் பற்றிய மற்றுமோர் வகைப்படுத்தல் வர்த்தக அடிப்படையிலான கலை வடிவங்கள், அலங்கார கலைவடிவங்கள் என்பவற்றை முன்வைக்கின்றன. எவ்வாறெனினும் அனைத்திற்கும் அடிப்படையில் அமைவது கோடுகள், வடிவங்கள், வர்ணங்கள், உருவ அமைப்புக்கள் என்ற கலையின் விதிகளேயாகும். இவற்றுள் கிறிஸ்தவ ஓவியக் கலை பற்றித் தொடர்ந்து நோக்குவோம்.



**பாரம்பரிய கிறிஸ்தவ கலைமரபுகள்**

உரோமானியக் கலைமரபு
பைசாந்தியக் கலைமரபு
ரோமானிஸ்டிக் கலைமரபு
கோதிக் கலைமரபு
நவீன கலைமரபு

என்ற வகையில் கிறிஸ்தவக் கலை மரபுகள் நிலை நிறுத்தப்பட்டு கிறிஸ்தவ மறை சார்ந்த கலைப்படைப் புகள் ஏராளமாக உருவாயின.

இலங்கையில் கிறிஸ்தவ ஓவியக்கலை

இலங்கையின் கிறிஸ்தவ மதம் தொடங்கிய காலத்தில் கிறிஸ்தவ தேவாலயங்களில் வரையப்பட்ட ஓவியங்கள் இயேசுவின் மற்றும் புனிதர்களின் திருவுருவப்படங்கள், சிற்பங்கள் என்பன வணக்கத்திற்காகவும், வழிபாட்டிற்காகவும், விவிலிய விளக்கங்களாகவும், கதை கூறல்களாகவும் மற்றும் அலங்கரிப்பு வேலைகளாகவுமே காணப்பட்டன.

அதேவேளை கிறிஸ்தவ ஓவியங்கள், பண்பாட்டு அடையாளங்கள், சடங்குகளிற்கு அமைவாகவும், சுதேசிகள் தமக்கேயுரிய வகையிலும் புதிய உருவாக்கங்களை உள்நாட்டுக் கலைப் பாணியில் வடிவமைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு சில உதாரணங்கள்…

◆ டேவிட் பெயின்ரர் கண்டி திரித்துவக் கல்லூரி ஓவியங்கள் (நல்ல சமாரித்தன், பாதம் கழுவும் இயேசு)

◆ றிச்சட் கபிரியேல் வரைந்த ஓவியங்கள் (புனித அன்னம்மாள், இறுதி இராவுணவு, உயிர்த்த கிறிஸ்து)



1990 களின் பின் இலங்கையின் ஓவியக்கலைகளில் ஏற்பட்ட உடைப்பு கிறிஸ்தவ ஓவியக் கதையிலும் தாக்கங்களை ஏற்படுத்தின. கிறிஸ்தவ சிந்தனைகள், விழுமியங்கள், விவிலியக் கலைகளைக் குறியீடுகளாக வெளிப்படுத்தல் என்ற வகையில் புதிய வடிவம் எடுத்தமையை அவதானிக்கலாம். யுத்தத்தின் கோரப் பிடிக்குள் சிக்குண்ட படைப்பாளிகள் தமது காண்பியங்களின் உள்ளடக்கமாக கிறிஸ்தவத்தின் துன்பியலையும் நம்பிக்கைகளையும் தமது வாழ்வியலோடு இணைத்துப் படைப்புக்களை வெளிக் கொணர்ந்துள்ளனர்.

## சிந்திக்கச் சில வினாக்கள்

◆ எமது சமூகத்தில் கிறிஸ்தவ மற்றும் வரலாறு சார்ந்த பதிவுகள் பாதுகாக்கப்படுகின்றனவா?

◆ அவை பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக் கொள்கிறோமா?

◆ அதிகாரத்தில் உள்ளோர் வல்லமையுடையவராக தமது தெவைக்கேற்ப கலைப்படைப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளும் நிலையை ஏன் கண்டும் காணாதவர்களாயுள்ளோம்?

◆ இவற்றையும் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கையளிக்ககும் பொறுப்பு யாருக்கு உரியது?

பப்சி மரியதாசன்

# தொழில்நுட்ப வளர்ச்சியின் பாதகமான விளைவுகள் !

விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக நவீன சாதனங்கள் கண்டுபிடிக்கப்படுவது ஒருபுறமிருக்க, அதன் விளைவாக மனித குலத்துக்கு தீங்குகளும் பெருகிக் கொண்டே செல்கின்றன. மக்களுக்கு இன்றைய காலத்தில் பெரும் தீங்குகளை விளைவித்துக் கொண்டிருக்கும் நவீன சாதனங்களில் ஒன்றாக 'ஸ்மாட் போன்' மாறியிருக்கின்றது.

'ஸ்மாட் போன்' கைத்தொலைபேசியின் வாயிலாக இன்றைய நவீன யுகத்தில் மக்களுக்குக் கிடைக்கின்ற அனுகூலங்களைப் பார்க்கிலும் பிரதிகூலங்களே கூடுதலாக ஏற்படுவது தெரியவந்துள்ளது. ஸ்மாட் போன்களின் பயன்பாட்டினால் தற்காலத்தில் ஏற்படுகின்ற விபத்துகளும், மரணங்களும் இதற்கு சான்றாக அமைகின்றன.

வீதியில் நடந்து செல்லும் போது கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால், வீதிவிபத்துகள் பெருகியுள்ளன. பலர் காயமடைவதையும், மரணங்கள் சம்பவிப்பதையும் நாம் காண்கிறோம். கைத்தொலைபேசியைப் பயன்படுத்தியபடி தண்டவாளத்தின் மீது நடந்து சென்ற வேளையில் புகையிரதத்தால் மோதுண்டு உடல் சிதறிப் பலியாகிப் போனோரின் எண்ணிக்கையும் ஏராளம்.

இவ்வாறான மரணங்கள் துரதிர்ஷ்டமும் பரிதாபமும் மிகுந்தவையாகும். கைத்தொலைபேசிப் பாவனையில் காணப்படுகின்ற ஆபத்துகள் தொடர்பாக ஊடகங்களில் எச்சரிக்கை விளம்பரங்கள் வெளிவருகின்ற போதிலும் இவ்விடயத்தில் எதுவித பலனும் ஏற்பட்டதாக இல்லை. 'ஸ்மாட் போன்' பாவனையினால் விபத்துகளும் மரணங்களும் அதிகரித்தபடியே செல்கின்றன.

கல்வியறிவற்றோர் மாத்திரமன்றி நன்கு கற்றவர்களும் கூட கைத்தொலைபேசியின் பாவனையினால் அநியாயமாக உயிரை மாய்த்துக் கொள்கின்றனர் என்பதுதான் இங்கு வியப்புக்குரிய விடயம். சமீப காலமாக கைத்தொலைபேசியின் விளைவாக சம்பவித்துள்ள மரணங்களை எடுத்து நோக்கும் போது இந்த உண்மையை அறிந்து கொள்ளலாம். நீர்வீழ்ச்சி ஒன்றின் அருகே நின்றபடி 'செல்பி' எடுத்துக் கொண்ட வேளையில், நீருக்குள் தவறி விழுந்து வைத்தியர் ஒருவர் மரணமான சம்பவம் இறுதியாகப் பதிவாகியிருக்கின்றது. 'செல்பி ' மோகம் என்பது எவரையுமே விட்டு வைக்கவில்லையென்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

புதிய இடங்களுக்கு சுற்றுலா செல்வோர், விந்தைமிகு இடங்களில் நின்றபடி தங்களைப் ஒளிப்படம் எடுத்துக் கொள்ள விரும்புவது இன்று நேற்றுத் தோன்றிய அவா அல்ல. ஒளிப்படக் கருவி கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் இருந்தே மனிதனைப் பீடித்துள்ள ஆசை இது. ஆனால் ஒருவரை மற்றவர் ஒளிப்படம் எடுப்பதனால் விபத்தோ மரணமோ சம்பவித்தது கிடையாது.



தன்னைத் தானே ஒளிப்படம் எடுத்துக் கொள்வதற்கான 'ஸ்மாட்போன்' என்ற சாதனம் அறிமுகமானதன் பின்னரே விபரீதமும் வந்து சேர்ந்தது. புகையிரதப் பாதை, உயர்ந்த கட்டடங்களின் உச்சிகள், கடலோரம், நீர்வீழ்ச்சி, மலையுச்சிகள் என்றெல்லாம் பல்வேறு இடங்களுக்கும் மனிதனின் 'ஷெல்பி' ஆசை பரந்து விரிந்ததனால் பலர் அநியாயமாக உயிரிழந்து போயிருக்கிறார்கள்.

'ஸ்மாட் போன்' என்பது இன்றைய காலத்தில் மனிதனை ஆட்கொண்டு விட்ட ஒருவித போதை என்று கூறுவதில் தவறில்லை. இன்றைய இளைஞர், யுவதிகள் 'ஸ்மாட் போன்' என்ற சாதனத்துடனேயே எந்நேரமும் உறவாடிக் கொண்டிருக்க ஆசைப்படுகிறார்கள். அவர்கள் மனிதர்களுடன் பேசி நேரத்தை வீணடிக்க விரும்புவதில்லை. கைத்தொலைபேசியைக் கையில் ஏந்தியபடி அவர்கள் பித்துப் பிடித்தவர்களைப் போல இருப்பதைப் பார்க்கின்ற போது ஒரு விடயம் மாத்திரம் தெளிவாகப் புலப்படுகின்றது.

இதனை ஒருவித உளவியாதி என்று கூறுவதில் தவறில்லை. அரைமணி நேரத்துக்கு அவர்களிடமிருந்து கைத்தொலைபேசியைப் பிடுங்கி எடுத்து விட்டால் அவர்களால் உயிர் வாழ முடியாது.

நவீன சாதனங்களின் வருகையானது மனித குலத்தை எங்கே கொண்டு சென்று விட்டிருக்கிறதென்பது இப்போது புரிந்து விட்டது. இவ்வாறான போதையிலிருந்து மீள்வது இலகுவானதல்ல. நவீன தொலைபேசி சாதனங்களை வெளிநாட்டு நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு தயாரித்துக் கொண்டிருக்கின்றன. அவர்களது வர்த்தகப் போட்டியில் இளைஞர்களே பிரதான இலக்கு!

இதன் பிரதிகூலங்கள் குறித்து இன்றைய உலகம் கவலைப்பட்டுக் கொள்வதாகத் தெரியவில்லை. முகநூல் என்பதன் வாயிலாக இளைஞர், யுவதிகள் உட்பட மக்கள் மத்தியில் பெருகியுள்ள சீரழிவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன செய்யலாம் என்பதையிட்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் சிந்திப்பதாகத் தெரிய வில்லை. ஒழுக்க விழுமியங்களையும் கலாசார பண்பாடுகளையும் முகநூல் துடைத்தெறிந்து கொண்டிருப்பதையிட்டு சமூக ஆர்வலர்களும் கவலைப் படுவதைக் காண முடியவில்லை. *(தொடர்ச்சி 7ம் பக்.)*

# நூல் வெளியீட்டு விழா

சுவிற்சலாந்து நாட்டினை வதிவிடமாகக் கொண்ட குளோரியா ரூபா அன்ரன் அவர்கள் தாயகத்தில் தனது படைப்பினை அறிமுகம் செய்து வெளியிட்டுள்ளார்.

"திருவருள் இயேசு அந்தாதி" என்னும் நூலின் வெளியீட்டு விழாவானது 06.09.2024 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

அருட்பணி ஜீவேந்திரா போல் அமதி அவர்களின் தலைமையில் நடைபெறும் விழாவில் யாழ் மாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். விழாவிற்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் எழுத்தாளரும், இயக்குநருமான முனைவர் பாரதி கிருஷ்ணகுமார் அவர்கள் தமிழ்நாட்டில் இருந்து சிறப்பு அழைப்பாளராக வருகை தரவுள்ளார்.

## நீங்கா நினைவில் இரண்டாம் ஆண்டு

தோற்றம் 07 . 11 . 1936



மறைவு 16 . 08 . 2022

அமரர் **பிலிப் அருளானந்தம்** (செபமாலை)

இரக்கத்தின் தந்தையே!
விண்ணகப் பிறப்பின் இரண்டாம் ஆண்டில்
எம் பப்பாவுக்காக உம்மைப் போற்றி
உமக்கு நன்றிப் பா இசைக்கின்றோம்.
அவரை இவ்வுலக வாழ்வில் பல நற்பண்புகளுடனான
அழகான ஆளுமையைக் கொடுத்து
எம் தந்தையாக, வழிகாட்டியாக
முன்மாதிரிகையாக தந்த உமக்கு நன்றிகள் பல...

பப்பாவின் பிரிவு எமக்குப் பேரிழப்பாக இருந்தாலும்
அவரின் வழிகாட்டுதல்களோடும் பாசமான
நினைவுகளோடும் பயணிக்கின்றோம்.
பப்பாவின் ஆன்மா உமது இன்பமான சந்நிதானத்தில்
அமைதியுடன் இளைப்பாற அருள் கூர்ந்திடும்.

இல. 36/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 09 . 06 . 2004



விண்ணில் 03 . 09 . 2023

அமரர் **பத்மநாதன் வசீகரன்**

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்"
(எசா 62 : 3)

எதிர்வரும் 04.09.2024 அன்று சில்லாலை கதிரைமாதா கோவிலில் காலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

கீரியந்தோட்ட வீதி,
சில்லாலை, பண்டத்தரிப்பு

இவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
0769723736

## 1ம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 03 . 06 . 1973



உதிர்வு 24 . 08 . 2023

அமரர் **மரியஸ்ரான்லி றெக்னோஜெயதரன்**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வார்"
(யோவான் 11: - 25)

**ஆண்டுகள் ஒன்று ஆனாலும்**
**உம் பாச நினைவுகள் இன்னும்**
**எம் நெஞ்சிலே நிழலாடுகின்றன**
**நினைவுகள் நிலைத்திருந்தால்**
**பிரிவுகள் எதுவுமில்லை**

புனித செபஸ்தியார் வீதி,
சில்லாலை, பண்டத்தரிப்பு

தகவல்
அன்பு மனைவி, உற்றார்,
உறவினர், நண்பர்கள்

# தொழில்நுட்ப வளர்ச்சியின் பாதகமான விளைவுகள்!

(6ம் பக்கத் தொடர்ச்சி...)

'ஸ்மாட்போன்' பாவனை மனிதனுக்குத் தீங்கு தருவதாக இன்றைய இளைஞர்கள் மத்தியில் எவராவது பேசுவது முடியாத காரியம். அக்கருத்தை ஏற்றுக் கொள்வதற்கு இளைஞர், யுவதிகள் தயாராக இல்லை.

க. பொ. த. சாதாரண தர வகுப்பு மாணவருக்கே அவர்களது பெற்றோர் 'ஸ்மாட்போன்' சாதனத்தை கட்டாயமாக வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற நிலைமை இப்போது உருவாகி விட்டது. அதனை பெற்றோரிடம் வலிந்து கேட்கும்படியாக இன்றைய எமது சமூகக் கட்டமைப்பு மாற்றம் பெற்றுவிட்டதென்பது புரிகின்றது.

'ஸ்மாட்போன்' சாதனத்துக்குள் இன்றைய இளைய தலைமுறையினருக்குத் தேவையான பயனுள்ள ஏராளமான விடயங்கள் பொதிந்துள்ளன. அதேசமயம் இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தைச் சீரழிக்கக் கூடிய ஏராளமான ஆபத்துகள் அதற்குள் மறைந்துள்ளன. மனித சமுதாயத்துக்கு ஆக்கத்தைத் தந்துள்ள அறிவியல் வளர்ச்சியானது, அழிவுக்கும் வழிகோலும் போது யாரால்தான் அதனைத் தடுத்து நிறுத்த முடியும்?

## 1ம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 17 . 02 . 1943



உதிர்வு 06 . 09 . 2023

அமரர் **பிலோமினா பொன்னாபரணம் திரவியம்**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வார்"
(யோவான் 11: - 25)

**அன்றி எமைப்பிரிந்து ஆண்டுகள் ஒன்று ஆனதுவோ?**
**உத்தமியே என் தாயே ஆறுமென்றாலும் ஆறுமா? எம் மனம்**
**சிரித்த வதனம் நினைந்து சிரம் தாழ்த்துகின்றோம்**
**சிந்துகின்றோம் நிதம் கண்ணீர் மனம் நெகிழ**
**இறைவன் பதமதில் இளைப்பாறிடுங்கள்...**

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

என்றும் உங்கள் நினைவுகளோடு
செல்வதி – பெவன்

## இறைவனின் பிரசன்னத்தில் 11ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 15 . 06 . 1936



விண்ணில் 07 . 09 . 2013

அமரர்
**மோசஸ் பெனடிக்ற் ஆசீர்வாதம்**

""ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்கவேண்டும்" (திருப்பாடல் 27 -4)

இல. 138, 2ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

அன்புடன் நினைவுகூரும்
மனைவி, உறவினர்

## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு

அன்னை மடியில் 21 . 09 . 1959



ஆண்டவன் அடியில் 31 . 07 . 2024

அமரர் **அந்தோனி அமலோற்பவநாயகம்**
**(ஆனந்தன்)**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வார்"
(யோவான் 11: - 25)

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 30.08.2024(வெள்ளிக்கிழமை) காலை 6.45 மணிக்கு இளவாலை புனித யூதாததேயு ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியிலும் தொடர்ந்து அவரது இல்லத்தில் இடம்பெறும் தேநீர் உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

நல்லாயன் வீதி,
இளவாலை.

இங்ஙனம்
குடும்பத்தினர்

## யாழ். அமலமரித் தியாகிகளுக்கான வருடாந்த தியானம்



அமலமரித் தியாகிகள் யாழ். மாகாண குருக்களுக்கான வருடாந்த தியானம் இரண்டு பிரிவுகளாக முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் முதல் குழுவினருக்கான தியானம் கடந்த மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரையிலும் இரண்டாம் குழுவினருக்கான தியானம் கடந்த மாதம் 28ஆம் திகதி முதல் இம் மாதம் 03 ஆம் திகதி வரையிலும் நடைபெற்றன.

மன்னார் கீரி பிரதேசத்தில் அமைந்துள்ள ஞானோதயத்தில் நடைபெற்ற இத்தியானத்தை உரோமிலுள்ள அமலமரித்தியாகிகள் சர்வதேச உயர் குருமட அதிபர் அருட்தந்தை கிறகோரி ஆரோக்கியசாமி அவர்கள் தியான உரைகள், சிறப்பு நற்கருணை ஆராதனைகள், திருப்பலிகள் என்பவற்றினூடாக நெறிப்படுத்தினார். இத்தியானத்தில் 65 வரையான குருக்கள் பங்குபற்றினார்கள்.

## மடுத்திருத்தல ஆவணித் திருவிழா



மன்னார் மடுத்திருத்தல ஆவணிமாத திருவிழா பரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் கடந்த 15ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 14ஆம் திகதி புதன்கிழமை நற்கருணைவிழா இடம்பெற்றது.

திருவிழாத் திருப்பலியை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். திருவிழாத் திருப்பலி நிறைவில் அன்னையின் திருச்சொரூபப் பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெற்றன.

இவ்வழிபாடுகளில் சிலாபம் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை விமல் ஸ்ரீ ஜெயசூர்ய, அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வருகைதந்த இலட்சக்கணக்கான மக்கள் பங்குபற்றி அன்னையின் ஆசீரைப் பெற்றனர்.

## புங்குடுதீவில் பீடப்பணியாளர் மாத சிறப்பு நிகழ்வு



புங்குடுதீவுப் பங்கில் அனுஸ்ரிக்கப்படும் பீடப்பணியாளர் மாதத்தை சிறப்பித்து பீடப்பணியார்களால் அங்கு பல நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பங்குத்தந்தை அருட்தந்தை லியான்ஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் கடந்த 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சந்தை நிகழ்வும், விளையாட்டுக்களும் இடம்பெற்றதுடன் இந்நிகழ்வுகளில் பங்கு மக்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

## புனித மடுத்தீனார் சிறிய குருமடத்திற்கு புதிய மாணவர்களுக்கான விண்ணப்பம்



இறை அழைத்தலை ஊக்குவித்து மறைமாவட்ட குருக்களை உருவாக்கும் ஆரம்ப தளமாக அமைந்துள்ள யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தில் மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இறை அழைப்பை இனம் கண்டு குருத்துவ வாழ்விற்கான தெரிவை மேற்கொள்ளும் தளமான இக்குருமடத்தில் உருவாக்கம்பெற விரும்பும் மாணவர்கள் பங்குத்தந்தையர்களூடாக விண் ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 22 ஆம் திகதிக்கு முன்ன தாக தங்கள் விண்ணப்பங்களை பங்குத்தந்தை யளூடாக சமர்ப்பிக்கும் படி குருமட அதிபர் அருட் தந்தை T.செல்வரட்ணம் அடிகள் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் விழிப்புணர்வு கருத்தமர்வு

நீதி மற்றும் சமாதானத்திற்கான வடக்கு கிழக்கு குருக்கள் துறவிகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் நியமனம் தொடர்பான இணையவழி விழிப்புணர்வு கருத்தமர்வு கடந்த 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஒன்றிய இணைப்பாளர் கிளரேசியன் சபை அருட்தந்தை றொகான் டோமினிக் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் தொடர்பில் குருக்கள் துறவிகள் மத்தியில் கூட்டு நிலைப்பாட்டை உருவாக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டஇக்கருத்தமர்வில் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் கருத்தியலின் நோக்கம் அதன் தேவைப்பாடு தொடர்பான விளக்கவுரையை தமிழ் சிவில் சமூக அமைய செயற்பாட்டாளர் திரு. சுந்தரேஸ்வரன் அவர்கள் நிகழ்த்த தொடர்ந்து கலந்துரையாடல் நடை பெற்றது.

இக்கலந்துரையாடலில் பொது வேட்பாளர் தேவைப்பாடு அதன் பின்புலத்திலுள்ள சாதக பாதக விளைவுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. இவ்விணைய வழி கருத்தமர்வில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை நோயல் இம்மானுவேல், யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ.ஜெபரட்ணம், வடக்கு கிழக்கு குருக்கள் துறவிகள், அருட்சகோதரிகள் மற்றும் தமிழ் சிவில் சமூக அமைப்பின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

## புனித பத்திரிசியார் கல்லூரியில் நவீன வசதிகளுடன் உள்ளக விளையாட்டு அரங்கு



புனித பத்திரிசியார் கல்லூரியில் புதிதாக அமைக்கப்படவுள்ள உள்ளக விளையாட்டு அரங்கத்துடன் இணைந்த கேட்போர் கூடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 15ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட்தந்தை திருமகன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ.ஜெபரட்ணம் அடிகள் கலந்து கொண்டு புதிய கேட்போர் கூடத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

இக்கேட்போர்கூடத்தில் தசைப்பயிற்சி கூடம், கூடைப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட, டேபிள் ரெனிஸ், கரம், சதுரங்க திடல்கள், பார்வையாளர் மண்டபம் மற்றும் பரிசளிப்பு மேடை போன்றவை அமைக்கப்படவுள்ளன. இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் மற்றும் கல்லூரி நலன் விரும்பிகளெனப் பலரும் கலந்து கொண்டனர்.




## போயிட்டி புனித லூர்த்து அன்னை ஆலய இளையோர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட இரத்ததான முகாம்



இளவாலை போயிட்டி புனித லூர்து அன்னை ஆலய இளையோர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட இரத்ததான முகாம் கடந்த 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை ஞானறூபன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 30 வரையான குருதிக்கொடையாளர்கள் கலந்து இரத்ததானம் வழங்கியிருந்தார்கள்.

## அகவொளி மையத்தால் கிளி. முல்லை. மறைக்கோட்டங்களைச் சேர்ந்தோருக்கான திருமண ஆயத்த வகுப்பு

அகவொளி குடும்ப நல மையத்தால் முன்னெடுக் கப்பட்ட கிளிநொச்சி முல்லைத்தீவு மறைக்கோட்டத்தைச் சேர்ந்தோருக் கான திருமண ஆயத்த வகுப்பு கிளி நொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் 18.08.2024 அன்று நடைபெற்றது.



இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு ஆவணி மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.